

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 209 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 27 – ஞாயிற்றுக்கிழமை 10 மார்ச் 2024 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 209 : Thiruvalluvar Year - 2055 - Maasi 27 - Sunday 10 March 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00



## நெடுஞ்சாலைத்துறை சார்பில்

# ரூ.518.26 கோடி செலவில் சாலைகள் - பாலப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## 219 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் திருநெல்வேலி, தென்காசி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மாவட்டங்களில் 499 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நான்கு வழித்தட சாலைப்பணிகள், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்தில் 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு. ஆர். செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி.ந.சாந்தி, தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, மார்ச் 10 -**

**நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.518.26 கோடி செலவில் முடிவுற்ற 4 சாலைகள் மற்றும் ஒரு பாலப் பணியினை திறந்து வைத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 219 நபர்களுக்கு இளநிலை வரை தொழில் அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் திருநெல்வேலி, தென்காசி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மாவட்டங்களில் 499 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நான்கு வழித்தட சாலைப்பணிகள், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்தில் 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 219 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலைத் துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**கட்டி முடிக்கப்பட்டுள்ள 4 சாலைப் பணிகள் மற்றும் ஒரு பாலத்தை திறந்து வைத்தல்**

அந்த வகையில், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்கள், திருநெல்வேலி மற்றும் ஆலங்குளம் வட்டங்களில் 196 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருநெல்வேலி - செங்கோட்டை கொல்லம் நான்கு வழிச்சாலை;

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டத்தில் 108 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தாம்பரம் - முடிச்சூர், திருப்பெரும்புதூர் நான்கு வழிச் சாலை;

செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில், மதுராந்தகம் மற்றும் உத்திரமேரூர் வட்டங்களில் 54 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புக்கத்துரை - உத்திரமேரூர் நான்கு வழிச் சாலை;

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டத்தில் 140 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கடலூர் - சித்தூர் நான்கு வழிச் சாலை;

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி நாகலாபுரம் சாலையில், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர் மட்ட பாலம்;

என மொத்தம் 518 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 4 சாலைகள் மற்றும் ஒரு உயர்மட்ட பாலத்தினை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 219 இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு. ஆர். செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி.ந.சாந்தி, தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு புதிய கட்டடங்கள்!

# ரூ.143.69 கோடியில் புதிய - மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 10 -**

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் ரூ.143.69 கோடி செலவில் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள், மீன் விதைப் பண்ணைகள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் சார்பில் கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 136 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணைகள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 6 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர், மாணவியர் விடுதிக் கட்டடம், கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம் மற்றும் அயிரை மீன் ஆராய்ச்சி நிலையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

**கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணைகளை திறந்து வைத்தல்**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தெற்கு பகுதியில் 50 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்டுள்ள மீன் இறங்குதளம் மற்றும் கீழமுந்தல் மீனவ கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம், தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீனவ கிராமத்தில் 45 கோடி ரூபாய் செலவில் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ள மீன் இறங்குதளம், அமலிநகர் மீனவ கிராமத்தில் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்குதளம் மற்றும் கடம்பாவில் 5 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள புதிய அரசு மீன் விதைப்பண்ணை, நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் சிறு மீன்பிடி துறைமுகத்தில் 10 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூடுதல் கரையோர பாதுகாப்பு வசதிகள், செங்கல்பட்டு மாவட்டம், கடலூர் ஆலிகுப்பம் மீனவ கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம், கரூர் மாவட்டம், திருக்காம்புலியூரில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்ட மீன் விதைப்பண்ணை, புதுக்கோட்டை மாவட்டம், வடக்கம் மாபட்டினம் மீனவ கிராமத்தில் 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம்;

என மொத்தம் 136 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள் மற்றும் மீன் விதைப்பண்ணைகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களை திறந்து வைத்தல்**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 36 தங்கும் அறைகள், வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணியாளர் அறை உள்ளிட்ட வசதிகள் கொண்ட இரண்டு தளங்களுடன் 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர், மாணவியர் விடுதி மற்றும் கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம்;

தேனி மாவட்டம், குள்ளப்புரம், வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தில் 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில், ஆராய்ச்சி அலுவலகம், ஆய்வகம், பயிற்சிக் கூடம், மீன் நாற்றங்கால் அலகு, வெளி வளாக மீன் வளர்ப்பு தொட்டிகள், அயிரை மீன் வளர்ப்பு குளங்கள், அயிரை மீன் வளர்ப்பு தொட்டிகள் மற்றும் நவீன கழிப்பறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அயிரை மீன் ஆராய்ச்சி நிலையக் கட்டடம்;

என மொத்தம் 6 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, முதன்மைச் செயலாளர் / மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என்.பெலிக்ஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2024! இன்று

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் தந்துள்ளவர்களை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (10-3- 2024, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி முதல் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாக சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்.

இந்நேர்காணலின்போது, அந்தந்த நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் மட்டுமே இந்நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும்.

வேட்புமனு அளித்தவர்கள், தங்களுக்கான ஆதரவாளர்களையோ பரிந்துரையாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையெல்லாம் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 10-03-2024

# போதைக்கு எதிரான நடவடிக்கைகள்

போதை மருந்துகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்து வருகிறது தமிழ்நாடு அரசு. போதை மருந்து விற்பனையாளர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி வருகிறது அரசு. மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை எஸ்.பி.க்கள் மாநாட்டில் பேசிய முதலமைச்சர் அவர்கள் போதைப் பொருள் தடுப்பு குறித்து தான் அதிக அக்கறையோடு பேசினார்.

- ★ **கஞ்சா விளைவிப்பதை முற்றிலுமாகத் தடுத்தாக வேண்டும்.**
- ★ **மலையடிவாரங்களைக் கண்காணித்தாக வேண்டும்.**
- ★ **அண்டை மாநிலங்களில் இருந்து கடத்திவருவதைத் தடுத்தாக வேண்டும்.**
- ★ **எல்லை மாவட்டங்களில் சோதனைச் சாவடிகளை அதிகப்படுத்த வேண்டும்.**
- ★ **கடலோர மாவட்டங்களில் கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும்.**
- ★ **காவல் துறையினரின் ரோந்து அதிகரிக்க வேண்டும்.**
- ★ **அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.**
- ★ **போதைப் பொருள்கள் அதிகம் விற்பனையாகும் இடங்களை நிரந்தரமாகக் கண்காணிக்க வேண்டும்.**
- ★ **பள்ளி, கல்வி நிறுவனங்களுக்கு அருகில் போதைப் பொருள்கள் விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும். - என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருக்கிறார்.**

"இந்த நடவடிக்கைகளில் நான் சர்வாதிகாரியைப் போலச் செயல்பட்டு குற்றம் நடைபெறாமல் தடுப்பேன்" என்றும் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தார்கள். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இதுகுறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் தி.மு.க. அரசு பதவி ஏற்றதும் போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்துவது என்பது பெரும் சவாலாக இருந்தது.

அதன் அடிப்படையில், அரசால் தடை செய்யப்பட்ட மாவா, குட்கா உள்ளிட்டவற்றைப் பதுக்கி வைத்து விநியோகம் செய்பவர்கள், கடைகளில் விற்பனை செய்பவர்கள் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை விற்பவர்கள், கடத்துபவர்கள் குறித்து கண்காணித்து, அவ்விடங்களில் திடீர் சோதனைகள் மேற்கொண்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடர்ச்சியாக இரண்டு வார காலத்திற்கு மாநிலம் முழுவதும் போதைப் பொருள் தொடர்பாக சிறப்பு அதிரடிச் சோதனைகள் நடைபெற்றன. 2022 மார்ச் மாதம் ஆபரேஷன் கஞ்சா வேட்டை 2.0 என்ற பெயரிலும், 2022 டிசம்பர் மாதம் ஆபரேஷன் கஞ்சாவேட்டை 3.0 என்ற பெயரிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது மட்டுமின்றி, போதைப் பொருள் விற்பனை தொடர்பாக 100 மற்றும் 112 என்ற பொதுவான எண்களைத் தவிர்த்து, 94981 - 11191 என்ற எண்ணில் வாட்ஸ் ஆப் மூலமாகவும், காவல்துறையினருக்கான முகநூல், டிவிட்டர் பக்கங்களிலும் பொதுமக்கள் புகார் அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக, குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக கடந்த 2021 மே முதல் டிசம்பர் வரை 26,666 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 27,096 நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுள் 127 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் ரூ.37.36 கோடி மதிப்புள்ள 2,63,759 கிலோ குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

2022 ஆம் ஆண்டு குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக 30,792 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 32,006 நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுள் 121 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், சுமார் ரூ.49.90 கோடி மதிப்புள்ள 3,37,295 கிலோ குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக கடந்த 01.05.2021 முதல் 31.12.2021 வரை 5,131 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 6,304 நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுள் 226 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் ரூ.14.82 கோடி மதிப்புள்ள 14,828.23 கிலோ போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. இக்காலக்கட்டத்தில் இத்தகைய குற்றங்களில் ஈடுபட்ட 603 நபர்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

**இதேபோன்று, கடந்த 01.01.2022 முதல் 31.12.2022 வரை கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக 10,391 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 14,282 நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுள் 580 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், சுமார் ரூ.27.14 கோடி மதிப்புள்ள 27,140.026 கிலோ போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. இக்காலக்கட்டத்தில் இத்தகைய குற்றங்களில் ஈடுபட்ட 1,474 நபர்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.**

மாநிலத்தில் முக்கிய நகரங்களில், குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகிலுள்ள கடைகளில் சரக காவல் துறையினர் அடிக்கடி சோதனைகள் மேற்கொண்டு, தடை செய்யப்பட்ட கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்களைக் கண்டறிந்து அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்து கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

கஞ்சா விற்பனையில் ஈடுபடும் நபர்களை ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் சென்று காவல் துறையினர் கைது செய்தனர். மாநிலத்தில் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் குறித்து கிடைக்கும் நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில், மாவட்டக் காவல்துறையினர் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்து வருவதுடன், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

குற்றத் தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வழக்கமாக மேற்கொள்ளப்படும் சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளைக் கண்காணித்தும், குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்தும் அவர்கள் மேற்கொண்டு குற்றச்செயல்களில் ஈடுபடா வண்ணம் தடுக்கும் பொருட்டு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**காவல் நிலையத்திற்கு உட்பட்ட முக்கிய பகுதிகளில் காவல் நிலைய தொலைபேசி எண், ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் ரோந்துக் காவலர்கள் ஆகியோரது தொலைபேசி எண்களை பொதுமக்கள் பார்வைக்குத் தெரியும்படி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு குற்றச் சம்பவங்களைக் கண்டுபிடிப்பதில் முக்கியப் பங்காற்றும் சி.சி.டி.வி. கேமிராக்களை அவ்வப்போது பராமரிக்க தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குற்றங்களைத் தடுக்க காவலர்களுக்கு நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் (Body worn Camera) வழங்கப்பட்டுள்ளன. FRS (Face Recognition System) செயலியை தமிழகம் முழுவதும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

கிராமக் காவலர்கள் திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தி, காவல் ஆய்வாளர், வருவாய் வட்டாட்சியர் மற்றும் நீதித்துறை நடுவர்கள் அடங்கிய குழு அமைத்து 6 மாதத்திற்கு ஒரு முறை பொதுமக்களை நேரடியாக சந்தித்து, சட்டம் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2023 ஆம் ஆண்டில் NDPS சட்ட வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களின், 5,184 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இப்படி இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி வருகிறது தி.மு.க. ஆட்சி.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (8.3.2024) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே நாடாளுமன்ற மக்களவை தேர்தலுக்கான தொகுதி உடன்படிக்கையில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலைய செயலாளர் துரை வைகோ, அவை தலைவர் அர்ஜுன மூர்த்தி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# பல்வேறு துறைகளின் சார்பில் திட்டப் பணிகள்!

## தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 10 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தும் திறந்து வைத்தும் சிறப்பித்தார்.**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் 136 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணைகள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 6 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர், மாணவியர் விடுதிக் கட்டடம், கல்வித் தொகுதியின் கூடுதல் கட்டடம் மற்றும் அயிரை மீன் ஆராய்ச்சி நிலையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 172 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1520 குடியிருப்புகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 108 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு தரை மற்றும் நான்கு தளங்களுடன் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 10 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளை வழங்கினார்.

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள், சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் முதல் முறையாக சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத்தொகைக்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார்.

விழுப்புரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் புற்றுநோய் தடுப்பு பரிசோதனை மையத்தில் எச்.பி.வி தடுப்பூசி திட்டத்தை தொடங்கி வைத்தார்.

நெடுஞ்சாலைத் துறை சார்பில் திருநெல்வேலி, தென்காசி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணா மலை மாவட்டங்களில் 499 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நான்குவழித்தட சாலைப்பணிகள், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்தில் 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 219 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக 14 திருக்கோயில்களில் ரூ.131.15 கோடி மதிப்பீட்டிலான திருமண மண்டபங்கள், சுற்றுப்பிரகார மண்டபம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, வகுப்பறைகள் மற்றும் நூலகம், இளைப்பாறும் மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்கள், வணிக வளாகங்கள், பெருந்திட்ட வளாகப் பணிகள் போன்ற 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 15 திருக்கோயில்களில் ரூ.29.27 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விருந்து மண்டபம், காதுகுத்து மண்டபம், முடிகாணிக்கை மண்டபம், பணியாளர் குடியிருப்பு, திருமண மண்டபம், சஷ்டி மண்டபம், வாகன நிறுத்துமிடம், சேவார்த்திகள் தங்கும் விடுதி, கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், அர்ச்சகர் குடியிருப்பு, அன்னதான கூடம், வைணவ பிரபந்த பாடசாலை, வணிக வளாகம், பள்ளி அலுவலகம் மற்றும் நூலகம் போன்ற 17 திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகள் இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 118 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 21 பணிகளை திறந்து வைத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 212 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பொதுத்துறை சார்பில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்களுக்கு வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட கடனிற்காக அரசிடம் ஒப்புவிக்கப்பட்ட நிலப்பத்திர ஆவணங்களை 9,742 தாயகம் திரும்பியோர்க்கு திரும்ப வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்து, இன்று புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 3 நபர்களுக்கு அவர்களின் அடமான ஆவணங்களை மீள வழங்கினார்.

பொதுப்பணித் துறை சார்பில் சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகை மற்றும் தேனியில் 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகை ஆகியவற்றை திறந்து வைத்தார்,

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ.தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன், பொன். கோதண்டராமன், சு.வெங்கடேசன், ப.மருதநாயகம், மரு. முனைவர் இரா. கலைக்கோவன், எஸ்.இராமகிருஷ்ணன், ஆர்.என்.ஜோ. டி குருஸ், சி. கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய 10 தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு அரசாணைகளையும் ம. இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு நிருவாக அனுமதி ஆணையினையும் வழங்கினார்.

### கலைஞர் எழுதுகோல் விருது!

மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

காவல்துறை சார்பில் 4 நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனங்களின் செயல்பாட்டினை தொடங்கி வைத்தார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகளின் பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாக செயலாற்றிய இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட நிர்வாகங்களின் சார்பில் அம்மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

#### நியூ ஜெர்ஸி - கலிபோர்னியாவில் கொண்டாட்டம்!

வாஷிங்டன், மார்ச் 10-

முதலமைச்சர் திராவிட இயக்கத்தின் பாதுகாவலர், உலகத் தமிழர்களின் ஒற்றை நம்பிக்கையாக திகழ்பவர் தமிழ்நாட்டின் தாயுமானவருமான முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா அமெரிக்காவில் அயலகத் தி.மு.க. மற்றும் அமெரிக்க கலைஞர் அறக்கட்டளையும் இணைந்து சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அமெரிக்க வாழ்த் தமிழர்கள் கேக் வெட்டியும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாடினர்.

இதில் அமெரிக்க நியூ ஜெர்ஸி மாநிலத்தில் நியூ ஜெர்ஸி பாலா தலைமையிலும், டெக்ஸாஸ் மாநிலத்தில் டெக்சாஸ் பாண்டி, கலிபோர்னியாவில் கார்த்திகேயன் தலைமையிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நியூஜெர்ஸி மாநிலத்தில் நடந்த நிகழ்வில் கிருத்திகா, தீபா, இளமுருகு, பிரபு, கோசல், ரியாஸ் ஆகியோரும் டெக்சாசில் டாலஸ் சக்தி, செல்வா, ஆனந்த், கார்த்தி, கோபல் ஆகியோரும், கலிபோர்னியாவில் ஷான், கேசவ், நீல், ரியா, பல்வாள் சரவணகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### காங்கேயம் நகராட்சியில் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணி!

# முத்தூர் பேரூராட்சியில் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் புதிய பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச் 10-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் காங்கேயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் 05.03.2024 செவ்வாய்க்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி கே.ஜி.கே நகரில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய சுகாதார வளாக புதிய கட்டடம், 3வது வார்டில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்கா மற்றும் சத்யா நகரில் ரூ.25.00 மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய சுகாதார வளாக புதிய கட்டடம் என மொத்தம் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, முத்தூர் பேரூராட்சி நகபாளையம் வார்டு எண் 14யில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் தொட்டியபாளையம் - சாலியங்காட்டுப்பள்ளம் வழியாக நாகபாளையம், ஊடையம் வரை உள்ள தார்சாலை பலப்படுத்தும் பணி, பெருமாள்புதூர் வார்டு எண்.07, வாரச்சந்தை அருகில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் 02 பணிகள், வார்டு எண்.13 மகாலட்சுமி நகர் பூங்கா அருகில் ரூ.33.55 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகள் என மொத்தம் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், பொதுக்குழு உறுப்பினர் ஏ.கே. எஸ்.கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, காங்கேயம் நகராட்சி ஆணையாளர் கனிராஜ், காங்கேயம் நகர்மன்றத் தலைவர் சூரியபிர காஷ், காங்கேயம் வட்டாட்சியர் மயில்சாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழாவையொட்டி சென்னை எழும்பூர் சிராஜ் மஹாலில் 72 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் வழங்கினர். அருகில் பகுதிச் செயலாளர் சுதாகர், வேலு உள்ளனர்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (08.03.2024) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும் இடையே நாடாளுமன்ற மக்களவை தேர்தலுக்கான தொகுதி உடன்படிக்கையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர், தொல். திருமாவளவன் அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைர் சிந்தனைச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, பாபு மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிருவாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையில் 213 தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவு நீர் அகற்றும் ஊர்திக்கான கடனுதவி ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என் நேரு, குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, தொழில் ஆணையர் மற்றும் இயக்குநர் எல். நிர்மல்ராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) முகாம் அலுவலகத்தில் உலக மகளிர் தினத்தையொட்டி, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி மற்றும் கழக மகளிர் அணி நிருவாகிகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், கிராமி விருது பெற்ற செல்வகணேஷ் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### நாடாளுமன்றத் தேர்தல் 2024! 39 பேர் அடங்கிய

# காங்கிரஸ் முதல்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு!

### வயநாடு தொகுதியில் ராகுல்காந்தி மீண்டும் போட்டியிடுகிறார்!

புதுடெல்லி, மார்ச் 10 - நாடாளுமன்றத் தேர்தலையொட்டி காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல் குறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்தார். GFX அப்போது, சத்தீஸ்கர், கர்நாடகா, கேரளா, லட்சத்தீவு, மேகாலயா, நாகாலாந்து, சிக்கிம், தெலுங்கானா மற்றும் திரிபுராவில், காங்கிரஸ் சார்பில் போட்டியிடும், 39 பேர் அடங்கிய முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. வயநாடு தொகுதியில் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் போட்டியிடுகிறார். ஆலப்புழா தொகுதியில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபாலும், சத்தீஷ்கர் முன்னாள் முதலமைச்சர் பூபேஷ் பாகல், ராஜ்நான்காவுன் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். காங்கிரஸ் மூத்த தலைவர் சசிதரூர் திருவனந்தபுரத்தில் மீண்டும் போட்டியிடுகிறார். கர்நாடக மாநிலம் ஷிமோகா தொகுதியில் கீதா சிவராஜ் குமார் போட்டியிடுகிறார். கேரளாவில் முந்தைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக வெளியிடப்பட்டுள்ள 39 காங்கிரஸ் வேட்பாளர்களில் 24 பேர் எஸ்.சி., எஸ்.டி, ஓபிசி பிரிவு வேட்பாளர்கள் என்றும், 15 பேர் பொது வேட்பாளர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 10 தமிழறிஞர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகள்!

# மூத்த பத்திரிகையாளர் வி.என். சாமிக்கு கலைஞர் எழுதுகோல் விருது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்

சென்னை, மார்ச் 10 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ.தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன், பொன். கோதண்டராமன், சு. வெங்கடேசன், ப. மருதநாயகம், மரு. முனைவர் இரா. கலைக்கோவன், எஸ்.இராமகிருஷ்ணன், ஆர். என்.ஜோ. டி குருஸ், சி.கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய 10 தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு அரசாணைகளையும் ம.இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு குடியிருப்புக்கான நிருவாக அனுமதி ஆணையினையும் வழங்கினார்.

மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

**கனவு இல்லத் திட்டம்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 3.6.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாதமி விருது, முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழித் தமிழ் விருது போன்ற விருதுகளைப் பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் மூலமாக வீடு வழங்கப்படும்" என்று கனவு இல்லத் திட்டத்தை அறிவித்தார்.

கனவு இல்லத்திட்டத்தின் முதற்கட்டமாக 3.6.2022 அன்று பேரா.முனைவர் கு. மோகனராசு, ந.செகதீசன் என்கிற ஈரோடு தமிழன்பன், பூமணி என்கிற பூ.மாணிக்க வாசகம், இமையம் என்கிற வெ. அண்ணாமலை, இ. சுந்தரமூர்த்தி மற்றும் கவிஞர் புவியரசு என்கிற சு. ஜகன்னாதன் ஆகிய ஆறு அறிஞர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கனவு இல்லத்திற்கான ஒதுக்கீட்டு ஆணை வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றது.

இவர்களுள் கவிஞர் புவியரசு என்கிற சு. ஜகன்னாதன் அவர்களுக்கு 03.05.2023 அன்றும், ந.செகதீசன் (ஈரோடு தமிழன்பன்), பூமணி (பூ.மாணிக்க வாசகம்), இமையம் என்கிற வெ. அண்ணாமலை, இ. சுந்தரமூர்த்தி ஆகியோருக்கு 24.05.2023 அன்றும் பேரா.முனைவர் கு. மோகனராசு அவர்களுக்கு 30.05.2023 அன்று கனவு இல்லத்திற்கான திறவுகோலும் வழங்கப்பட்டது.

கனவு இல்லத் திட்டத்தின் கீழ், 2021- 2022ஆம் ஆண்டுக்கு கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ. தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன் ஆகிய மூவருக்கும், 2022-23ஆம் ஆண்டுக்கு பொன். கோதண்டராமன், சு. வெங்கடேசன், ப. மருதநாயகம், மரு. முனைவர் இரா. கலைக்கோவன், எஸ். இராமகிருஷ்ணன், ஆர்.என். ஜோ. டி குருஸ், சி. கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய பத்து அறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு அரசாணைகளையும், 2023-24ஆம் ஆண்டுக்கு ம. இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு குடியிருப்புக்கான நிருவாக அனுமதி ஆணைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

**கலைஞர் எழுதுகோல் விருது**

"சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும், 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்" என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 6-9-2021 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், 2021ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருது மூத்த பத்திரிகையாளர் ஐ. சண்முகநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ் இதழியல் துறை மூலம் சமூக மேம்பாட்டிற்காகப் பல ஆண்டுகள் பணியாற்றிப் பெற்றுள்ள நீண்ட அனுபவங்களையும், தமிழ் இலக்கிய உலகுக்கு ஆற்றியுள்ள அருந் தொண்டுகளையும் பாராட்டி 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, சிறப்பித்தார். இவ்விருதுடன் 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நாடாளுமன்ற தேர்தல் 2024**

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இன்று (8.3.2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து தி.மு. கழகமும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் கலந்து பேசியதில் தி.மு.க. கூட்டணியில் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் 1 (ஒரு) தொகுதியில் போட்டியிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

(வைகோ)
பொதுச்செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

### மடமைத் தளைகளை அறுத்தெறிந்து – வெளியேறி

# புத்துலகின் சிற்பிகளாய் மிளிர்ந்திட வாழ்த்து!

### உலக மகளிர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மார்ச் 10- உலக மகளிர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மடமைத் தளைகளை அறுத்தெறிந்து - வெளியேறி புத்துலகின் சிற்பிகளாய் மிளிர்ந்திட வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டார்.

உலக மகளிர் நாளையொட்டி வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நூற்றாண்டு நூற்றாண்டுகளாகத் தமக்கு விதிக்கப்பட்ட மடமைத் தளைகளை அறுத்தெறிந்து வெளியேறி, புத்துலகின் சிற்பிகளாக மிளிர்ந்திட உலக மகளிர் நாளில் அனைத்துப் பெண்களுக்கும் வாழ்த்துகள்!**

**உங்களின் சமூக பொருளாதார ஏற்றத்துக்கும், அரசியல் பங்கேற்புக்கும் அடித்தளம் அமைத்து ஊக்குவிக்கவும், எல்லா நிலைகளிலும் உங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும்தான் நமது திராவிட மாடல் (Dravidian Model) அரசு எண்ணற்ற பெண்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டங்களைத் தீட்டி வருகிறது.**

**சொற்களால் அல்லாமல், பெண்களைச் சக மனிதர்களாக, சமவுரிமை கொண்டவர்களாக மதிப்பதன் வழியே அவர்களைப் போற்றும் தலைமுறை உருவாகிட உழைப்போம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பெண் குழந்தைகளின் பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்துவதில்

# சிறப்பாகச் செயலாற்றிய 3 மாவட்ட ஆட்சியர்களுக்கு பதக்கங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்பித்தார்!

**சென்னை, மார்ச் 10- பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாகச் செயலாற்றிய இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான பதக்கங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகளின் பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாக செயலாற்றிய இராம நாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்டநிர்வாகங்களின்சார்பில் அம்மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களைவழங்கிச்சிறப்பித்தார்.

**பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாகச் செயலாற்றிய மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு பதக்கங்கள்**

தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளின்பாலினவிகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனைபுரிந்தமுதல்மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு முறையே தங்கம், வெள்ளி மற்றும்வெண்கலப்பதக்கங்கள்மற்றும்பாராட்டுபத்திரங்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்புநாளில்தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

2023-2024ஆம்ஆண்டில், மாவட்டத்தின் பிறப்பு பாலினவிகிதம், 5வயதிற்குட்பட்டகுழந்தைகள்இறப்புவிகிதம், உயர் பிறப்பு விகிதம் மற்றும் கருத்தரிப்பு மற்றும் மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனைநுட்பங்கள்,சட்டம் ஆகிய காரணிகளை கவனமுடன் பரிசீலித்து, இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்டநிர்வாகங்கள்தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாவட்ட நிர்வாகங்கள் சிறப்பாக செயலாற்றியுள்ளதை பாராட்டி, முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி. விஷ்ணு சந்திரன், அவர்களுக்கு தங்கப் பதக்கமும், காஞ்சிபுரம் மாவட்டஆட்சித்தலைவர்திருமதி கலைச்செல்வி மோகன், அவர்களுக்கு வெள்ளிப் பதக்கமும், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, அவர்களுக்கு வெண்கலப் பதக்கமும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதிபி.கீதாஜீவன்,சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி. வே.அமுதவல்லி ஆகியோர் கலந்துகொண்டனர்.

**நாடாளுமன்ற தேர்தல் - 2024**

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – விடுதலை சிறுத்தைகள் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இன்று (8.3.2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து தி.மு. கழகமும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் கலந்து பேசியதில் தி.மு.க. கூட்டணியில் – விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பின்வரும் இரண்டு (2) தொகுதிகளில் போட்டியிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

**தொகுதிகளின் விவரம்**

1. 13. விழுப்புரம் (தனி)
2. 27.சிதம்பரம் (தனி)

பிற கூட்டணிக் கட்சிகளின் இறுதி தொகுதிப் பங்கீட்டுக்கு உட்பட்டு இப்பட்டியல் உறுதி செய்யப்படும்.

(தொல்.திருமாவளவன்)
தலைவர்,
விடுதலை சிறுத்தைகள் கட்சி

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்தின் தலைவர் இ.ஆர்.ராஜ் நாராயணன் சந்தித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, வழக்கறிஞர் கிருஷ்ணா ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூபாய் 9 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில்

# 14 புதிய பல்வேறு துறைச் சார்ந்த அரசு கட்டடங்கள்

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

*தஞ்சாவூர், மார்ச் 10-*

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூபாய் 9 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் 14 புதிய பல்வேறு துறைச் சார்ந்த அரசு கட்டடங்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் வட்டம் கொ.வல்லுண்டான் பட்டு ஊராட்சியில் ரூ.38 இலட்சம் மதிப்பிலான நெல் நேரடிக் கொள்முதல் நிலைய கட்டடம், ஒரத்தநாடு வட்டம் கீழஉளூர் ஊராட்சியில் ரூ.23.57 இலட்சம் மதிப்பிலான ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், பருத்திக்கோட்டை ஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் சின்னபருத்திக்கோட்டையில் பொது விநியோக கட்டடமும், ஒரத்தநாடு ஊராட்சியில் ரூ.418.46 இலட்சம் மதிப்பிலான ஒரத்தநாட்டில் தாலுக்கா அலுவலகக் கட்டடம், ஒக்கநாடு கிழக்கு ஊராட்சியில் ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரத்தநாடு கிழக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டடம், கண்ணுக்குடி மேற்கு ஊராட்சியில் ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருத்துவமனை கட்டடம், மதுக்கூர் ஊராட்சியில் ரூ.47.85 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருந்தக கட்டடம், பட்டுக்கோட்டை வட்டம் பட்டுக்கோட்டை ஊராட்சியில் ரூ.225.41 இலட்சம் மதிப்பீட்டில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு (அலகு அலுவலகம்) ஓட்டுநர் சோதனை தடத்துடன் கூடிய கட்டடம், ஆலடிக்குமுளை ஊராட்சியில் ரூ.30.60 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடம், ஏனாதி ஊராட்சியில் ரூ.30.60 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடம், பேராவூரணி வட்டம் பூவாலூர் ஊராட்சியில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோக கட்டடம், சேதுபாவாசத்திரம் வட்டம் சொக்கநாதபுரம் ஊராட்சியில் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம், பேராவூரணி வட்டம் காலகம் ஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் திருபூரணிக்காடு கடைத்தெருவில் பொதுவிநியோக கட்டடம், சேதுபாவாசத்திரம் வட்டம் முடச்சிக்காடு ஊராட்சியில் ரூ.13.37 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டடமும் ஆக மொத்தம் ரூபாய் 9 கோடியே 53 இலட்சத்து 3 ஆயிரம் மதிப்பீட்டில் 14 புதிய பல்வேறு துறைச் சார்ந்த அரசு கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, முதல்வரின் முகவரி துறையின் கீழ், பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் புதுமையான திட்டமான “நீங்கள் நலமா” என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.3.2024 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து தொடங்கி வைத்தார். பின்னர், பயனாளிகளிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங்களைக் கேட்டறிந்ததைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஆலடிக்குமுளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பயனாளிகளிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் (பேராவூரணி), பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர்.ஜி.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர்.எஸ்.கண்ணப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாலகணேசன், முதன்மை கல்வி அலுவலர் இரா.மதன்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் இலக்கியா (தஞ்சாவூர்), செல்வி.ஜெயஸ்ரீ (பட்டுக்கோட்டை), மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, பட்டுக்கோட்டை நகராட்சி நகர மன்றத் தலைவர் செ.சண்முக பிரியா செந்தில்குமார், ஒன்றியக் குழுத் தலைவர்கள் பார்வதி சிவசங்கர், பழனிவேல் (பட்டுக்கோட்டை), கி.முத்துமாணிக்கம் (சேதுபாவாசத்திரம்), மற்றும் பலர் உடன் உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் பாக நிலை முவர்கள், பாகநிலை குழு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் கூட்டம் பாப்பாக்கோயிலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் கே.ஆர்.என்.போஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளருமான க.ராஜேந்திரன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் சீனிவாசன், கேஸ் வி.செந்தில், திருநாவுக்கரசு மற்றும் பலர் உள்ளனர்.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

# வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

*கழக நிர்வாக வசதிக்காகவும் -கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய இரண்டு ஒன்றியங்கள், வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.*

*மேற்சொன்னவாறு பிரிக்கப்படும் ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கீழே குறிப்பிட்டுள்ளவர்கள் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.*

*அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட* **வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு** *ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.*

**வடமதுரை கிழக்கு ஒன்றியம்:** *ஊராட்சிகள் - 1.வேலாயுதம்பாளையம், 2.கானப்பாடி, 3.மோர்பட்டி, 4.புத்தூர், 5. சுக்காம்பட்டி, 6.சித்துவார்பட்டி, 7.கொம்பேறிபட்டி, 8.சிங்காரகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் அய்யலூர் பேரூர்.*

**வடமதுரை கிழக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர்: ஆ.பாண்டி**

*மாலப்பட்டி, காணப்பாடி அஞ்சல்,*
*வேடசந்தூர் வட்டம்,*
*திண்டுக்கல் மாவட்டம்.*

**வடமதுரை மேற்கு ஒன்றியம்:** *ஊராட்சிகள் - 1.பாகானத்தம், 2. பிலாத்து, 3.தென்னம்பட்டி, 4.கொசவபட்டி, 5.குளத்தூர், 6.பாடியூர், 7.வேல்வார்கோட்டை, 8.சிங்காரகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் வடமதுரை பேரூர்.*

**வடமதுரை மேற்கு ஒன்றியம்**

**செயலாளர் : போ. சுப்பையன்**

*தூங்கணம்பட்டி,*
*பாகநத்தம் அஞ்சல்,*
*வேடசந்தூர் வட்டம்,*
*திண்டுக்கல் மாவட்டம்.*

**குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம்:** *ஊராட்சிகள் - 1.திருக்கூர்ணம், 2.ஆர்.வெள்ளோடு, 3.ஆலம்பாடி, 4.கோட்டானத்தம், 5.தோளிப்பட்டி, 6.கருங்கல், 7.டி.கூடலூர், 8.லந்தகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பாளையம் பேரூர்.*

**குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம்**

**செயலாளர் : சு.சீனிவாசன்**

*காந்தி நகர், சத்திரப்பட்டி அஞ்சல்,*
*குஜிலியம்பாறை வட்டம்,*
*திண்டுக்கல் மாவட்டம்*

**குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம்:** *ஊராட்சிகள் - 1.புதுக்கோட்டை, 2.ஆர்.கோம்பை, 3.வடுகம்பாடி, 4.வாணிக்கரை, 5.சின்னலுப்பை, 6.உல்லியகோட்டை, 7.மல்லப்புரம், 8.கூம்பூர், 9.கரிக்காலி ஆகிய 9 ஊராட்சிகள்.*

**குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர்: மா.ராஜலிங்கம்,**

*ரெட்டியபட்டி,*
*ஆர்.கோம்பை,*
*குஜிலியம்பாறை வட்டம்.*
*திண்டுக்கல் மாவட்டம்*

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 8.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு!



நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், **கழகத் தலைவர்** அவர்கள் தலைமையிலான தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு பாடுபடுவதாக அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநிலக்குழு பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் தேசியச் செயலாளர்கள் எஸ்.சுரேஷ்தேவன், பி.எஸ்.தேவன் மற்றும் மாநில நிர்வாகிகள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை, நேற்று முன்தினம் (8.3.2024), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். அதுபோது, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை உடனிருந்தார்.



சென்னை, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (8.3.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குனர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குனர் ச.அண்ணாதுரை மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருத்துறைப்பூண்டி

# ராம மடக்குளம் பகுதியில் மேம்பாடு திட்டங்கள்!

## பொதுமக்கள் பாராட்டு!

*திருவாரூர், மார்ச் 10-*

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியின் நடுவில் அமைந்திருக்கும் பாரம்பரியம் மிக்க ராம மடக்குளம் அழகிய முறையில் தூர்வாரப்பட்டு எழில்மிகும் வகையில் கரைகள் மற்றும் நடைமேடைகள் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

திராவிட நாயகர் தளபதி அவர்களின் ஆட்சியின் மேலும் ஒரு சாதனையாக கருதப்படும் இந்த குளம் மேம்பாட்டு பணிகளுக்காக முதல்வர் தளபதி அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் கே.என்.நேரு, நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து ஆகியோருக்கு பொதுமக்கள் பாராட்டினை தெரிவித்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலகளின்படி பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தி.மு.க.வை சேர்ந்த கவிதா பாண்டியன் அவர்களின் தலைமையிலான நகராட்சி நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. நகரத்தின் மையப்பகுதியில் உள்ள பாரம்பரியம் மிக்க ராமமடக்குளம் குப்பைகள் நிறைந்து பாழடைந்து கிடந்த நிலையில் அந்த குளத்தை செம்மைபடுத்தி தூர்வாரி, அழகிய நடைமேடைகள் மற்றும் பூங்காக்கள் அமைத்து நகராட்சி நிர்வாகம் மக்களின் பாராட்டினை பெற்றுள்ளது.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நிதி ஆகிய உதவிகளுடன் இந்த ராமமடக்குளம் புதுப்பொலிவோடு சீரமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் திருத்துறைபூண்டி நகரத்தின் பெருமை மிகு அடையாளங்களுக்குள் ஒன்றாக ராமமடக்குளம் அமைந்து இருக்கிறது.

மேலும் கட்டி முடிக்கப்பட்ட ராம மாடக்குளம் மற்றும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.454.00 இலட்சம் மதிப்பீட்டில் திருக்குளம், வெட்டுக்குளம், தேளிக்குளம், செக்கடிக்குளம் மேம்பாடு பணி மற்றும் ஜே.கே.ஆர்.கார்டன் பூங்கா, சாய்நகர் பூங்கா பணியை நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன் தலைமையில், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் சாருஸ்ரீ திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தி.மு.க. நகர கழக செயலாளரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆர்.எஸ். பாண்டியன், நகரமன்ற துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் சிக்கந்தர், ஓம்சக்தி.கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அரசு அதிகாரிகள், வர்த்தக சங்கம், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வு கூட்டத்தில் சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டு குழு தலைவர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையில் குழுவினர் ஆய்வுகளுக்கு பின் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ. தர்மராஜ், முனைவர் மா. இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன், பொன். கோதண்டராமன், நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், ப. மருதநாயகம், மரு. முனைவர் இரா. கலைக்கோவன், எஸ். இராமகிருஷ்ணன், ஆர்.என். ஜோ. டி குருஸ், சி. கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய 10 தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு அரசாணைகளையும் ம. இராசேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகிய அறிஞர்களுக்கு நிருவாக அனுமதி ஆணையினையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஒளவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் அரசு மருத்துவமனையில்

# புற்றுநோய் தடுப்பு பரிசோதனை மையத்தில் எச்.பி.வி. தடுப்பூசி திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 10-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, விழுப்புரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் புற்றுநோய் தடுப்பு பரிசோதனை மையத்தில் எச்.பி.வி. தடுப்பூசி திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

கருப்பை வாய் புற்றுநோய்க்கு மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) முக்கிய காரணமாகும். தேசிய நோய்த் தடுப்பு திட்டத்தில் எச்.பி.வி. தடுப்பூசியை நடைமுறைப்படுத்திய நாடுகளின் அனுபவம், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் முந்தைய நிலைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை காட்டியுள்ளது.

மனித பாப்பிலோமா வைரசுக்கு தடுப்பூசி போடுவது, உலக சுகாதார நிறுவனத்தின் 2030ஆம் ஆண்டிற்குள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஒழிக்கும் கொள்கையின் அடித்தளமாக அமையும். எச்.பி.வி. தடுப்பூசி திட்டம் இந்தியாவில் ஒரு சில மாநிலங்களில் ஏற்கனவே நடைபெற்று வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் 9 முதல் 14 வயது வரையிலான பெண் குழந்தைகளை உள்ளடக்கும் வகையில் எச்.பி.வி தடுப்பூசி திட்டம் இலவசமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இது போன்ற திட்டத்தை செயல்படுத்துவது இதுவே முதல் முறை ஆகும்.

தடுப்பூசியின் நன்மைகள் குறித்து உணர்த்துவதற்காக எச்.பி.வி தடுப்பூசி பற்றிய தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு (IEC) நடவடிக்கைகள் ஏற்கனவே விழுப்புரம் நகரத்தில் உள்ள மருத்துவ நிபுணர்களுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 9 முதல் 14 வயதுடைய ஒவ்வொரு பெண்ணுக்கும் இரண்டு டோஸ் HPV தடுப்பூசியை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதல் தடுப்பூசி போடப்பட்ட நாளிலிருந்து 180 நாளன்று அடுத்த தடுப்பூசி போட வேண்டும்.

முதற்கட்டமாக, விழுப்புரம் நகரில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள புற்றுநோய் நிறுவன பரிசோதனை மையத்தில் தகுதியான சுமார் 2,000 சிறுமிகளுக்கு முதல் டோஸ் HPV தடுப்பூசி போடப்படும். பின்னர், மாநில சுகாதாரத் துறை, தேசிய சுகாதாரப் பணி மற்றும் ரோட்டரி சேவை அமைப்புகளின் ஒத்துழைப்புடன், விழுப்புரம் நகரில் உள்ள ஒவ்வொரு பள்ளிகளிலும் சாத்தியமான வகையில் படிப்படியாக தடுப்பூசி போடப்படும். இது பின்னர் மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் உள்ள தகுதியுள்ள பெண் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைவர் ஆர். சேஷசாயி, செயல் துணைத் தலைவர் டாக்டர் இ. ஹேமந்த் ராஜ், இயக்குநர் டாக்டர் கல்பனா பாலகிருஷ்ணன் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி மற்றும் மருத்துவத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

213 தூய்மைப் பணியாளர்களுக்கு

# கழிவுநீர் அகற்றும் நவீன ஊர்திக்கான கடனுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 10-**

**தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையில் 213 தூய்மைப் பணியாளர்களுக்கு கழிவு நீர் அகற்றும் நவீன ஊர்திக்கான கடனுதவிக்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையில் 213 தூய்மைப் பணியாளர்களுக்கு கழிவு நீர் அகற்றும் நவீன ஊர்திக்கான கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர்அகற்றும் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையிலும், தூய்மைப்பணியில் ஈடுபட்டுள்ள பட்டியல் இனத்தவர் / பழங்குடியினர் நேரடியாக கழிவு நீர் அகற்றும் பணி செய்வதை தவிர்க்கும் பொருட்டும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தில் 50 விழுக்காடு மானியமாகவும், புதிய தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் இதர பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 40 விழுக்காடு மானியமாகவும், என மொத்தம் 213 நபர்களுக்கு 125.86 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 61.29 கோடி ரூபாய் மானியமாக வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, 213 தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர் அகற்றும் ஊர்திக்கான கடனுதவிக்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 தூய்மைப் பணியாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என் நேரு, குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, தொழில் ஆணையர் மற்றும் இயக்குநர் எல். நிர்மல்ராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நீலகிரி மாவட்டம், குன்னூர், உபாசி கூட்டரங்கத்தில், ரூ.8.68 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட கரும்பாலம், மகாலிங்கா இண்ட்கோ தேயிலைத் தொழிற்சாலைகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் துவக்கி வைத்து, தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக புதிய வாகனங்களை வழங்கினார். உடன் இண்ட்கோசர்வ் கூடுதல் தலைமை செயலர் / செயலாட்சியர் திருமதி.சுப்ரியா சாஹு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அரசு செயலர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நிர்மல்ராஜ், தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையர் திருமதி.கிரேஸ் லால்ரீன்டிக்கீ, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் /கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2024) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஒளவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, நேற்று முன்தினம் (08.03.2024) தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள தமிழ் பெரும்புலவர் ஒளவை பெருமாட்டியாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் சீ. சௌமியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு - திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்ரமணி - முனைவர். பி.பழனியப்பன் அறிக்கை!

*தருமபுரி, மார்ச் 10-*

*தருமபுரி மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்ரமணி, முனைவர் பி.பழனியப்பன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தருமபுரி மாவட்டத்தை மையமாக கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை உருவாக்கி வரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்க நாளை (11.03.2024) தருமபுரி அரசு கலை அறிவியல் கல்லூரி வளாகத்திற்கு வருகை தர உள்ளார் அது சமயம் மாவட்ட எல்லையான தொப்பூர் முதல் வழிநெடுக திரளாக நின்று சிறப்பான வரவேற்பு அளிக்கும் வகையில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்,*





*ஊராட்சி, வார்டு, கிளை அணிகளின் தலைவர்கள், கழக நிர்வாகிகள், சார்பு துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்து சிறப்பான வரவேற்பு அளித்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.*

# மரபுகளை உடைக்கும் தனித்துவமான எழுத்து நடை!

## ஒளவையார் விருதுபெறும் எழுத்தாளர் திருமிகு பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ்க்கு முதல்வர் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 10-**

**2024 ஆம் ஆண்டுக்கான ஒளவையார் விருது பெறும் எழுத்தாளர் திருமிகு பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தள வாழ்த்துச் செய்தி வருமாறு :**



சாதி, மதம், பாலினம், இனம் எனப் பல்வேறு அடையாளங்களினூடே ஒடுக்குமுறையின் அரசியலை அழுத்தமாகப் பேசும் 'கருக்கு' எனும் தன்வரலாற்றுப் புதினத்தின் வழியாக உலக அளவில் கவனம் ஈர்த்த எழுத்தாளர் பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் அவர்கள் தமிழ்நாடு அரசின் இந்த ஆண்டுக்கான ஒளவையார் விருதைப் பெறுகிறார்.

மரபுகளை உடைக்கும் தனித்துவமான எழுத்து நடையால் தமிழிலக்கியத்துக்குப் பங்காற்றி, இந்த விருதுக்குத் தேர்வாகி இருக்கும் அவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.03.2024 அன்று சென்னையில் அரசின் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்துகளை கேட்டறியும் 'நீங்கள் நலமா' திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் பயனடைந்த பயனாளிகளை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்து கருத்துகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் பிரேமா ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், வெட்டன்விடுதி கிராமத்தில், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 07.03.2024 அன்று திறந்து வைத்தார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.கோ.சோமசுந்தரம், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மாலா ராஜேந்திரதுரை, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




முதலமைச்சர் அவர்கள் "நீங்கள் நலமா" திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அரியலூர் மாவட்டம், செந்துறையிலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பயனாளிகளிடம் அலைபேசி வாயிலாக கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.




விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுக்கா கீழ்புத்துப்பட்டு ஊராட்சியில் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 778 பயனாளிகளுக்கு ரூ10.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆன நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம்,மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மரக்காணம் வட்டாட்சியர் பாலமுருகன் உள்ளனர்.

# மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருமண மண்டபம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்!

திருவாரூர், மார்ச் 10 -

மன்னார்குடியில் புதுப்பிக்கப்பட்ட ராஜகோபால சுவாமி திருமண மண்டபத்தை தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், அறங்காவல் குழு தலைவர் கருடா இளவரசன், நகர செயலாளர் வீரா. கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

மன்னார்குடியில் வரலாற்றுப் பெருமைமிக்க ராஜகோபால சுவாமி திருக்கோவில் கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் சீரிய ஆட்சியில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் முயற்சிகளால், அறங்காவல் குழு தலைவர் கருடா இளவரசன் மேற்பார்வையில் பல்வேறு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பொலிவோடு காணப்படுகிறது.

கோவில் வாசலில் இரண்டு தளங்களோடு உள்ள திருமண மண்டபம் போதிய கவனிப்பின்றி கடந்த ஆட்சியில் 2014 ல் மூடப்பட்டது. பொதுமக்களுக்கு மிக்க பயனுள்ளதாக அமைந்திருந்த இந்த மண்டபத்தை கழக ஆட்சியில் புதுப்பித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவேன் என சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி. ராஜாவின் வாக்குறுதியின்படி, இன்று இந்த மண்டபம் புது பொலிவோடு சுமார் ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது. புதுப்பிக்கப்பட்ட ராஜகோபாலசுவாமி திருமண மண்டபத்தை தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் காணொளி வாயிலாக திருந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், அறங்காவல் குழு தலைவர் கருடா இளவரசன், நகர செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு ஆகியோர், அவைத்தலைவர் க.தன்ராஜ் மற்றும் அறங்காவல் குழு நிர்வாகிகள், கழக தோழர்கள் பங்கேற்றனர்.

### "நீங்கள் நலமா" என்ற புதிய திட்டத்தின் மூலம்

# பயனாளிகளிடம் தொலைபேசி வாயிலாக அரசு திட்டங்கள் குறித்து கருத்துகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கேட்டறிந்தார்!

அரியலூர், மார்ச் 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "நீங்கள் நலமா" என்ற புதிய திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டம், செந்துறையிலிருந்து பயனாளிகளை தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு அரசுத்திட்டங்களின் பயன்பாடு மற்றும் கருத்துகளை கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் கலந்து கொண்டார்.

அரியலூர் மாவட்டம், செந்துறையிலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பல்வேறு அரசுத்துறைகளின் திட்டங்கள் மூலம் பயனடைந்த பயனாளிகளின் பட்டியலில் சிலரை தேர்வு செய்து அவர்களுடன் தொலைபேசி வாயிலாக உரையாடி அரசுத்திட்டங்களின் பயன்பாடு குறித்து கேட்டறிந்தார்.

அதன்படி அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி மாணவி தமிழ் பொன்னி மற்றும் ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி தீபதர்ஷினி ஆகியோரிடம் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கப்படுவது கேட்டறிந்தபோது மாணவிகள் இத்தொகை தங்களுக்கு பயனுள்ளதாக உள்ளதாகவும், டைப்ரைட்டிங் பயிற்சி போன்றவற்றில் தாங்கள் பயில்வதற்கு இத்தொகை மிகவும் உதவியாக இருப்பதாக தெரிவித்தனர்.

ஜெயங்கொண்டத்தை சேர்ந்த மாரிமுத்து என்ற மாற்றுத்திறனாளி நபரிடம் இலவச பஸ்பாஸ் வழங்கப்பட்டுள்ளது குறித்தும் அவை பயனுள்ளதாக இருக்கிறதா என்பது குறித்தும் கேட்டறிந்தார். பின்னர், ஆனந்தவாடி கிராமத்தைச் சேர்ந்த கவிதா என்பவரிடம் விடியல் பயணம் திட்டம் குறித்து கேட்டறிந்தபோது இத்திட்டம் தங்களுக்கு உதவியாக உள்ளதாகவும், அன்றாட போக்குவரத்திற்கான தொகை சேமிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர். தொடர்ந்து அரியலூரரைச் சேர்ந்த ராஜகுமாரி என்பவரிடம் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் பயனுள்ளதாக உள்ளதா என்பது குறித்தும், மருந்து மாத்திரைகள் முறையாக வழங்கப்படுகிறதா என்பது குறித்தும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் கேட்டறிந்தார்.

இதேபோன்று மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து, அரியலூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி காஞ்சனா என்பவரிடம் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 1000 ரூபாய் முறையாக வழங்கப்படுகிறதா என்பது குறித்து, அத்தொகை பயனுள்ளதாக உள்ளதா என்பது குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் ஆண்டிமடம் கிராமத்தை சேர்ந்த குழந்தைதெரசா என்பவரிடம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து ஆண்டிமடம் கிராமத்தை சேர்ந்த தேவேந்திரன் என்பவரிடம் தோட்டக்கலைத்துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிழல் வலை கூடாரம் பயனுள்ளதாக இருக்கிறதா என்பது குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், குருமஞ்சாவடி கிராமத்தைச் சேர்ந்த நிவாஸ் என்பவரிடம் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ள பயனுள்ளதாக உள்ளதா என்பது குறித்தும், அதன் மூலம் மேற்கொள்ளப்படும் தொழில் குறித்தும், தொழில் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார். தொடர்ந்து வாலாஜாநகரம் கிராமத்தைச் சேர்ந்த லலிதா என்பவரிடம் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் வாயிலாக மருந்து மாத்திரைகள் முறையாக வழங்கப்படுகிறதா என்பது குறித்தும், இத்திட்டம் பயனுள்ளதாக உள்ளதா என்பது குறித்தும் கேட்டறிந்தார். பின்னர், ஜெயங்கொண்டம் ஊராட்சியைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவரிடம் வேளாண்மைத் துறையின் சார்பில் வழங்கப்பட்டுள்ள தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பயனுள்ளதாக இருக்கிறதா என்பது குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் தஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கறம்பக்குடி பேரூர் தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு திருமணமஹாலில் 3000 பேருக்கு மாபெரும் அன்னதானம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் தலைமையிலும், பேரூர் கழக செயலாளர் பேரூராட்சித்தலைவர் உ.முருகேசன் வடக்கு ஒன்றிய செயலாளர் வெ.முத்துக்கிருஷ்ணன் தெற்கு ஒன்றிய செயலாளர்,மாவட்ட அறங்காவல் குழுத்தலைவர் தவ பாஞ்சாலன், ஒன்றிய பெருந்தலைவர் மாலா ராஜேந்திரதுரை, எஸ்.எஸ்.கருப்பையா ஆகியோர் முன்னிலையிலும் வழங்கப்பட்டது. விழாவில் எம்.அப்துல் லத்தீப், என். அப்துல் அஜீஸ், ஏ.செல்வராஜ், டி.மதிவாணன், எம்.சாதிக் பாட்ஷா, சத்யா ரவிக்குமார், எஸ்.எம்.சின்னத்தம்பி, டி.ஆர்.துரைராஜ், பி.தங்கமணி, எஸ்.ஆர். பாலையா கே.அப்துல் அலீம், பி.பரூக், நைனாமுகமது சிவ.திருமேனிநாதன்.என்.ஆர். பரிமளம்,தொ.கருப்பையா.கே.அசோக்குமார்,ஞானச்சந்திரன், வி.புண்ணியமூர்த்தி, எம். பிரபாகரன், பி.செந்தில்குமார், டி.பாஸ்கர்,எம்.சதீஸ்குமார்,உமர் பாட்ஷா, எம்.எ.டி.ஜியா, முகமது நியாஸ், சேகர், உபயத்துல்லா, இதயத்துல்லா, பர்சாத், கே.திருமேனிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மாணவ, மாணவிகள் கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில்

# பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை, மார்ச் 10-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, பல்வேறு முடிவுற்றதிட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அமைச்சர் சிவ வீ மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இல்லம் தேடிக் கல்வி திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்றையதினம் திருவரங்குளம் மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன்படி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அரையப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 41 மாணவர்களுக்கும், 48 மாணவிகளுக்கும் மற்றும் வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் 52 மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் மற்றும் வேங்கிடகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 92 59 மாணவர்களுக்கும், 92 மாணவிகளுக்கும் மற்றும் வல்லத்திராக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் 89 மாணவர்களுக்கும், 97 மாணவிகளுக்கும் மற்றும் திரு வரங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில்64மாணவர்களுக்கும், 58 மாணவிகளுக்கும் மற்றும் மாஞ்சான்விடுதி அரசு மேல்நிலைப்பள்ளியில் 49 மாணவர்களுக்கும், 62 மாணவிகளுக்கும் என மொத்தம் 803 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இந்த விலையில்லா மிதிவண்டிகளை மாணவ, மாணவிகள் நாள்தோறும் பயன்படுத்துவதன் மூலம் பள்ளிக்கு உரிய நேரத்திற்குள் சென்று வருவது மட்டுமல்லாமல், உடல் ஆரோக்கியத்திற்கும் பேருதவியாக அமைகிறது.

மேலும், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம் மற்றும் ரூ.45 இவட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வாரச் சந்தை கட்டிடம் உள்ளிட்ட முடிவுற்றத் திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டிடங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பள்ளத்திவிடுதி ஊராட்சி, ஆலங்குடி கொத்தமங்கலம் சாலையில் உள்ள அம்புலி ஆற்றின் குறுக்கே ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிதாக பாலம் கட்டும் பணி மற்றும் பள்ளத்திவிடுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள அங்காடி கட்டடப் பணி மற்றும் கொத்தக் கோட்டை, தோப்புப்பட்டி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பணி மற்றும் புதுக்கோட்டைவிடுதி, கும்மங்குளம் பகுதியில் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பணி மற்றும் புதுக்கோட்டைவிடுதி, அரசடிப்பட்டி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பணி உள்ளிட்ட புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடர்புடைய அலுவலர்கள் விரைவாக பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி மாவட்ட சுல்வி அலுவலர் ராஜேஸ்வரி, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், டி. தங்கமணி, அருவடிவேல், கே.எம்.சுப்பிரமணியன், மணிமொழி மனோகரன், முகம்மது ரபீக், ராஜ பெரியண்ணன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை விளக்கப் பொதுக்கூட்டம், செயங்கொண்டம் நகரம் சன்னதி தெருவில் நடைபெற்றது. கூட்டத்தில் மகளிர் அணி பிரச்சாரகுழு செயலாளர் கவிஞர் சல்மா, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், நகர கழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

# மகளிர் தினம்: ‘மகளிர் நலன் போற்றும் முதல்வருக்கு நன்றி’ தெரிவித்து கோலங்கள்!




































மகளிருக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கப்படும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணத் திட்டம், ஊதியத்துடன் கூடிய 12 மாதங்கள் பேறுகால விடுப்பு, பெண்கள் தடையின்றி உயர்கல்வி பெற புதுமைப்பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களின் கடன் தள்ளுபடி, தமிழ்நாடு மகளிர் கொள்கை 2024 என முதலமைச்சர் அறிவித்துச் செயல்படுத்தி வரும் மகளிருக்கான திட்டங்கள் எண்ணற்றவை.

இத்திட்டங்களை எளிய வகையில் மகளிருக்கு எடுத்துச் சொல்லும் வகையிலும், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ‘மகளிர் நலன் போற்றும் முதலமைச்சருக்கு நன்றி’ என எழுதிக் கோலமிடும் வகையில் பெண்களை ஊக்குவிக்க வேண்டும் என தலைமைக் கழகத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இன்று மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மகளிர் தங்கள் வீட்டு முன்பாக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கோலமிட்டு வருகின்றனர். தி.மு.க. சார்பில் சமூக வலைத்தளத்திதும் #DMK4Women என்ற ஹேஷ்டேக் வழியாகப் பதிவுகள் இடப்பட்டன. தி.மு.க. சார்பில் பல்வேறு இடங்களில் போஸ்டர்களும் ஒட்டப்பட்டுள்ளன.

# கலைஞரும் நானும் 60



# “என்னம்மா பிரச்சினை? என்ன செய்யணும்?”

**“அரசியலில் பெண்களின் பங்கு அதிகரிக்க வேண்டும் என விரும்பியதுடன், அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டியவர் கலைஞர். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, அவரைப் பார்த்து வியந்து கற்றுக் கொண்டவை ஏராளம்” என நினைவுகளைப் பகிர்கிறார் முன்னாள் எம்.எல்.ஏ. பாலபாரதி.**

**பாலபாரதி, முன்னாள் எம்.எல்.ஏ.,**

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அரசியல், கலைத்துறை எனப் பல வகைகளில் அறிந்திருந்தாலும், நேரடியான சந்திப்பும், அறிமுகமும் அமைந்தது 2006-ஆம் ஆண்டில்தான். திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக நின்றபோது, வேட்பாளர் அறிமுகம் செய்வதற்காக, கலைஞர் அவர்கள் வந்திருந்தார். பிரச்சார மேடையில் கலைஞர் அவர்களுடன் எங்கள் கட்சித் தலைவர்களும் இருந்தனர்.

திண்டுக்கல் வீட்டு வசதி வாரியத்தால் வீடு பெற்றவர்களுக்கு, நீண்ட காலமாக பட்டா தொடர்பான சிக்கல் நீடித்தது. அது தொடர்பான கோரிக்கை மனுவை, ‘திண்டுக்கல் தொகுதியின் கோரிக்கைகள்’ என எழுதி, கலைஞர் அவர்களிடம் அந்த மேடையிலேயே அளித்தேன்.

எப்படியும் அவர்தான் முதல்வர் ஆவார், அவர் கவனத்துக்குக் கொண்டு சென்றால் நிறைவேற்றித் தருவார் எனக் கொடுத்தேன். கலைஞர் சிரித்துக் கொண்டே “இன்னும் தேர்தல் முடியலையேம்மா, அப்புறம் கொடுத்துக்கலாமே” என அந்த மனுவைப் பெற்றார்.

மேடையில், அவர் பேசும்போது, “நிலமற்ற ஏழை மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்கிற வாக்குறுதியை கம்யூனிஸ்ட் கட்சிகளின் கோரிக்கைகளில் இருந்துதான் எடுத்துள்ளோம்” என அறிவித்தார். அவரை சந்தித்த முதல் நிகழ்வே ஏழை மக்களுக்கான பட்டா, நிலம் என்கிற நிகழ்வாக அமைந்தது.

## பூங்கா அரும்பும்

2006-11 காலகட்டத்தில் அவர் முதலமைச்சராக இருந்த அவையில், நான் உறுப்பினராக இருந்தேன். சட்டசபை நடைபெறும் நேரத்தில் அவர் இருந்தார் என்றால், சபையே கலகலப்பாக இருக்கும். காலை ஒன்பதரை மணிக்கு அலுவல் தொடங்குகிறது என்றால், பத்து நிமிடங்கள் முன்னதாகவே வந்து விடுவார். ஒரு நாளும் தாமதமாக வந்து பார்த்தது இல்லை.

ஒருமுறை, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தோழர் நன்மாறன் அவர்கள், ‘மதுரையில் தொழில்நுட்பப் பூங்கா அறிவித்தீர்களே, அது எந்த நிலையில் உள்ளது?’ எனக் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த கலைஞர், சிரித்துக் கொண்டே ‘அரும்பும் நிலையில் உள்ளது’ என்றார். கேட்கப்படும் கேள்விகளுக்கு ஏற்ப, அந்த நேரத்தில் அவர் அளிக்கும் பதில் பொருள் நிறைந்ததாகவும், ரசிக்கும்படியும் இருக்கும்.

## இரண்டு கேள்விகள்

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் நீண்ட நாட்களுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன. எனது தொகுதிக்குட்பட்ட பகுதியான ரெட்டியார்சத்திரம் என்கிற ஊரில், போட்டியிட்ட எங்கள் கட்சியினரின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப் பட்டன. அதிகாரிகள் கூறிய காரணங்களும் ஏற்புடையதாக இல்லை. இதையடுத்து கட்சியினருடன் சேர்ந்து திண்டுக்கல்-பழனி தேசிய நெடுஞ்சாலையில் மறியல்



**சட்டமன்றத்தில் அரசு மீது கடும் விமர்சனங்களை வைப்போம். குற்றம் சாட்டி இருக்கிறோம். ஆனால், அவர் கோபப்பட்டு பதிலளித்ததே இல்லை. அந்த நிதானம் வேறு யாருக்கும் வராது.**

போராட்டத்தில் ஈடுபட்டேன்.

எங்களைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றப்படும் நேரத்தில், ஒரு காவல் அதிகாரி ஓடி வந்து “சி.எம். உங்களிடம் பேசவேண்டுமாம் மேடம்” எனத் தொலைபேசியை அளித்தார். எதிர்முனையில் கலைஞர் இருந்தார். “என்னம்மா பிரச்சினை” எனக் கேட்டறிந்தவர், என்ன செய்யணும்மா? எனக் கேட்டார். “இப்போதைக்குத் தேர்தலை ரத்து செய்வதே சரியானது அய்யா” என்றேன். அன்றிரவே, தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை ரத்து செய்வதாக ஆணையிட்டார் கலைஞர்.

என்ன பிரச்சினை? என்ன செய்ய வேண்டும்? என இரண்டே கேள்விகள்தான். அதுவும், முதலமைச்சரே களத்தில் நிற்பவர்களிடம் கேட்பது எனில், சாதாரண விஷயமல்ல. கலைஞர் அந்த வகையில் அபூர்வமானவர். ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என நினைப்பதில் கலைஞருக்கு நிகர் யாருமில்லை.

## பெண்கள் நலனில்...

தமிழ்நாடு பெண்கள் ஆணையத்துக்கு, சட்ட அங்கீகாரம் வேண்டும் என நான் குரல் கொடுத்து வந்தேன். அதற்குத் தனி அதிகாரம், நிதி, சுயமாக இயங்கும் தன்மை ஆகியவை அளிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தேன். அதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தார்.

முதியவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கைம்பெண்களுக்கான நிதி உதவித் திட்டத்தில், அவர்களுக்கு ஆண் வாரிசு இருக்கக்கூடாது என்கிற ஒரு விதி இருந்தது. அதை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தேன். வாரிசுகள் கவனிக்கவில்லை என்பதால்தான், அவர்கள் நிதி உதவி கேட்கின்றனர். அதேநேரத்தில், ‘ஆண் வாரிசுதான் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும், பெண் வாரிசு கவனிக்கத் தேவையில்லை’ என்கிற பாகுபாட்டினை ஏன் உருவாக்க வேண்டும்? அதனால் அந்த நிபந்தனையை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுப்பினேன். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கலைஞர், நிபந்தனையை நீக்கி ஆணையிட்டார்.

## ‘தீக்கதிர்’ வாசிப்பு

நான் சட்டமன்றத்தில் இருந்தபோது, கட்சியின் மூத்தத் தலைவர்கள் தோழர்கள் என்.வரதராஜன், நன்மாறன் ஆகியோர் கலைஞரை சந்திக்க ஒருமுறை வருகை தந்தனர். தலைவர்கள் வந்து சேரும் வரை கலைஞர் அவர்களுடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது தீண்டாமைச் சுவர் இடிக்கப்பட்ட நேரம், கம்யூனிஸ்ட் கட்சி இந்திய அளவில் அரசியல் நிலைப்பாடுகளை மாற்றிய நேரம் என்பதால், அதுபற்றிப் பேசினார். “என்னம்மா, தீண்டாமைச் சுவர்தான் இடிச்சாச்சில்ல, இன்னும் ‘தீக்கதிர்’ல எழுதிக்கிட்டிருக்கீங்க’ எனக் கேட்டார். “அய்யா பிரச்சினைகள், உங்க கவனத்துக்கு வரவேண்டும் என்பதால் எழுதி இருப்பாங்க” என்றேன். இந்திய அளவில் மதச்சார்பற்ற கூட்டணி குறித்தும், எங்கள் கட்சி எடுத்துள்ள நிலை குறித்தும் அப்போது பேசிக் கொண்டிருந்தார்.

அப்போதும் வீட்டுமனைப் பட்டா தொடர்பான கோரிக்கை மனு அளித்தேன். உடனே அருகில் இருந்த உதவியாளர் சண்முகநாதன் அவர்களைப் பார்த்து, “அவங்க வரும் நேரம் எல்லாம் அந்தப் பிரச்சினையைக் கொண்டு வர்றாங்க, எனக்கு அதுகுறித்த விவரங்களைத் தெளிவாகக் கொடுங்க” எனக் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர், அந்தப் பிரச்சினைகளை 2008-ஆம் ஆண்டுத் தீர்த்தும் வைத்தார். 25 ஆண்டுகளாக நீடித்து வந்த பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

## சிறுபான்மை மாணவிகளுக்கு விடுதி

சிறுபான்மைச் சமூக மாணவிகள் உயர்கல்வி படிப்பதற்கு வசதியாகத் தனி உறைவிட விடுதி வேண்டும் எனக் கோரிக்கை வைத்தேன். அதை ஏற்றுக் கொண்டு, ஐந்து மாவட்டங்களில் தொடங்குவதற்கு ஆணையிட்டார். அதில், திண்டுக்கல் மாவட்டமும் ஒன்று. இப்படித் தொடர்ச்சியாக மக்களின் தேவைகள் குறித்து கலைஞரிடம் கோரிக்கை வைத்துக் கொண்டே இருப்பதும், அவற்றை நிறைவேற்ற ஆவன செய்ததும், எப்போதும் கலைஞரை நினைத்துப் பார்க்க வைக்கும் நிகழ்வுகள். மக்களின் தேவைகளை அறிந்தவர் என்பதால், அவையெல்லாம் நடந்தன.

அந்த ஆட்சிக்காலத்தின் இறுதியில் அரசியல் ரீதியாக எதிர்நிலை எடுத்தோம். சட்டமன்றத்தில் அரசு மீது கடும் விமர்சனங்களை வைப்போம். குற்றம் சாட்டி இருக்கிறோம். ஆனால், அவர் கோபப்பட்டு பதிலளித்ததே இல்லை. அந்த நிதானம் வேறு யாருக்கும் வராது.

கலைஞர் அவர்களின் அரசியல் பக்குவம், மாற்றுக் கட்சியினரை அவர் அணுகும் விதம் ஆகியவற்றில் ஒரு சதவிகிதம் கற்றுக்கொண்டாலே போதும், நாம் அரசியலில் இயங்குவதற்கான தகுதியைப் பெற்று விடுவோம்.

**....பகிர்வார்கள்**

## ‘அவுட்லுக்’ காட்டும் திராவிட மாடல்!




கழக அரசு படைத்து வரும் சாதனைகளை ‘Dravidian Model: Leading By Example’ என்கிற தலைப்பில், பல்வேறு துறைசார் நிபுணர்களின் கட்டுரைகளோடு வெளிக் கொணர்ந்துள்ளது ஆங்கிலத்தில் வரும் ‘அவுட்லுக்’ இதழ். மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் சிறப்பாசிரியராக இந்த இதழை, மிக நேர்த்தியாக தயாரித்து இருக்கிறார். கல்வி, மருத்துவம், உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், மொழியியல், நூலகத்துறை, பாலின சமத்துவம் என பல்வேறு தலைப்புகளில் பல தரப்பு நிபுணர்கள் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். தமிழ்நாட்டிடமிருந்து இந்திய ஒன்றியத்தின் பிற மாநிலங்கள் தெரிந்துக் கொள்ளவேண்டிய ‘திராவிட மாடல்’ திட்டங்களின் பயன்களை இவ்விதழ் மூலம் அறிந்துகொள்ளலாம். இணையத்தில் கட்டணமின்றி படிக்கக் கிடைக்கிறது. இணைப்பு :

https://www.outlookindia.com/magazine/05-march-2024

## ஃப்ளாஷ்பேக்



பொன்.அண்ணாவி



### பிறந்த நாள் வாய்ப்பு!

அண்ணன் நன்னியூர் ராஜேந்திரன் அவர்கள் மாவட்டச் செயலாளராக இருந்த போது, என்னை தலைமைக் கழகப் பேச்சாளராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கினார். கழகத்தில் சேர்ந்த நாள் முதலே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் தளபதி அவர்களையும் சந்திக்க வேண்டும் என்பது என் நெடுநாள் கனவாக இருந்தது. 2012 மார்ச் 1-ஆம் நாளன்று அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அவர்களையும் தளபதி அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னை தலைமைக் கழகப் பேச்சாளர் என்று அறிமுகம் செய்து கொண்டேன். “வாழ்த்துகள்ய்யா” என்றார்.

**-கவிஞர் பொன்.அண்ணாவி,**
**தலைமைக் கழகப் பேச்சாளர், கரூர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### போராட்ட அணிகள்!

1963-ஆம் ஆண்டு, ஒன்றிய அரசு கொண்டு வந்த ஆட்சி மொழிகள் சட்டத்துக்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தது கழகம். நெடிய போராட்டத்துக்குத் தயாராக வேண்டும் என அழைப்பு விடுத்தார் பேரறிஞர் அண்ணா. ஜூன் மாதத்தில் சென்னையில் கூடிய கழகத்தின் செயற்குழுவிலும், பொதுக்குழுவிலும் நீண்ட போராட்டத்துக்கு முடிவு செய்யப்பட்டன. கலைஞர் தலைமையில் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. நீண்ட கால சிறைக்குத் தயாராக இருப்பவர்கள், குறுகிய கால சிறைவாசத்துக்குத் தயாராக இருப்பவர்கள் என பட்டியல் தயாரிக்கப்பட்டு, போராட்ட அணிகள் பிரிக்கப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

413

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131